[2021] 7 எஸ்.சி.ஆர். 226

தி/எ். சுப்ரீம் பிவாண்டி வாடா மேனர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்.

எதிர்

மகாராஷ்டிரா மாநில அரசு

(குற்றவியல் மேல்முறையீடு எண். 680/2021)

ஜூலை 26, 2021

முன்னிலை

[மாண்புமிகு நீதியரசர் டாக்டர் திரு. தனஞ்சய ஒய் சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா]

குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 : பிரிவு 438 – முன்பிணை - மேல்முறையீட்டாளர் - புகார்தாரருக்கு சாலை கட்டுமானத்திற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டது - மேல்முறையீட்டு நிறுவனத்தால் குற்றம்சாட்டப்பட்ட நான்கு பேர் அதன் ஊழியர்களாக நியமிக்கப்பட்டு, அரசு அதிகாரி அளித்த பட்டியலை வைத்து, அதன் அடிப்படையில் விவசாயிகளை கண்டறிந்து அவர்களின் கோரிக்கையின் உண்மைதன்மையை சரிபார்த்து நஷ்ட ஈடு வழங்க ஈடுப்படுத்தப்பட்டனர் - மேல்முறையீட்டாளரால் நில உரிமையாளர்கள் தொடர்புடைய பொய்யான ஆவணங்களை வைத்து கிராம மக்களுக்கு பெயரளவு தொகை கொடுத்து ரூ.5.08 கோடி

மோசடியில் ஈடுப்பட்டதாக நான்கு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றம்சாட்டி அவர்களுக்கு எதிராக புகாரானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது - விசாரணை நீதிமன்றம் சட்டத்தின் பிரிவு 156 (3) கீழ் புலனாய்வு செய்ய உத்தரவிட்டது - முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது - உயர்நீதிமன்றத்தால் அனைத்து நான்கு குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு முன் பிணை வழங்கப்பட்டது - புகார்தாரரால் மேல்முறையீடு - தீர்வு: குற்றவியல் நடுவர் பிரிவு 156(3) ன் கீழ் உத்தரவிட்டது உயர்நீதிமன்றத்தில் சவால் கிடையாது மற்றும் அது இறுதி நிலை அடைந்துவிட்டது - உயர்நீதிமன்றம் புகாரை கருத்தில் கொள்ளும்போது, பிரிவு 156(3) ன் கீழ் நடுவரால் உத்தரவிட்டதின் உண்மை தன்மையை சந்தேகம் எழுப்பி தவறு புரிந்துவிட்டது - இரண்டவதாக, உயர்நீதிமன்றத்தின் உத்தரவில் குறிப்பிட்ட சட்டத்தின் நிலையானது, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் அத்தியாயம் XV-ல் தொடர்ந்து கூறப்பட்ட கொள்கைகளுக்கு உடன்படிக்கையாக இல்லை - உயர்நீதிமன்றம் முன்பிணை வழங்கும்போது, குற்றத்தின் தன்மை மற்றும் ஈர்ப்புக்கான தன்மையை இழந்துவிட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது, சாலை விரிவாக்கத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிறுவனம் பணம் செலுத்த புகார்தாரரால் ஒப்புக்கொண்ட தொகையை மோசடியாகவும், தவறாகவும் பயன்படுத்தியதாக கடுமையான குற்றச்சாட்டு உள்ளது - முதல் தகவல் அறிக்கையில், மோசடி மற்றும் தவறாக நிதியை பயன்படுத்தியது குறித்த குற்ற செயல் குறித்து விவரமாக குறிப்பிடப்பட்டுள்ளது - குற்றத்தின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, முன்பிணை வழங்குவதற்கு எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

மேல்முறையீடுகளை அனுமதித்து, இந்நீதிமன்றமானது

தீர்வு: உயர்நீதிமன்றம், முதல் இரண்டு மேல்முறையீடுகளில் பிரிவு 438 கீழ் வழங்கிய முன்பிணை மற்றும் அதை தொடர்ந்து அமர்வு நீதிமன்ற உத்தரவை சவால் செய்து, இதனுடனான மேல்முறையீடுகளில் உத்தரவிட்டது வெளிப்படையாக குற்றத்தின் தன்மையையும், அதன் தீவிரத்தையும் கவனிக்க தவறிவிட்டதாக தெளிவாக உள்ளது. புகார்தாரரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை அகலப்படுத்தும் பணியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிறுவனத்தால் செலுத்த வேண்டிய தொகையை மோசடியாக கையாண்டதாக எதிர்மனுதாரர் - குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன. முதல் தகவல் அறிக்கையில், நிதியை மோசடியாகவும் மற்றும் தவறாகவும் பயன்படுத்தியது தொடர்பான குற்ற செயல் குறித்து விவரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றத்தின் தீவரத்தை கருத்தில் கொண்டு, முன்பிணை கோருவதற்கான எந்த வழக்கும் முன்வைக்கப்படவில்லை என்று தெரிகிறது. உயர்நீதிமன்றம் சட்டத்தையும், பொருண்மையையும் மதிப்பீடு செய்வதில் தவறு இழைத்துவிட்டது.

சுரேஷ் சந்த் ஜெயின் எதிர் மத்திய பிரதேச மாநிலம் (2001) 2 **எஸ்.சி.சி** 628 : [2001] 1 **எஸ்.சி.ஆர்** 257 ; தில்வார் சிங் எதிர் டெல்லி அரசு (2007) 12 **எஸ்.சி.சி** 641 ; திலக் நகர் இண்டஸ்டீரீஸ் லிமிடெட் எதிர் ஆந்திரா மாநில அரசு (2011) 15 **எஸ்.சி.சி** 571; அஞ்சு சௌத்ரி எதிர் உத்திர பிரதேச மாநில அரசு (2013) 6 **எஸ்.சி.சி** 384: (2012) 13 **எஸ்.சி.ஆர்** 901; சுசிலா அகர்வால் எதிர் மாநில என்.சி.டி ஆப் 15 டெல்லி (2020) 5 **எஸ்.சி.சி** 1 : (2020) 2

எஸ்.சி.ஆர் 1 : மயகலா தர்மராஜன் தெலுங்கானா மாநில அரசு (2020) 2 எஸ்.சி.சி 743 – குறிப்பிடப்படுகிறது.

வழக்கு சட்ட குறிப்புகள்

[2001] எஸ்.சி.ஆர் 257	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 18**
(2007) 12 எஸ்.சி.சி 641	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 19**
(2011) 15 எஸ்.சி.சி 571	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 19**
[2012] 13 எஸ்.சி.ஆர் 901	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 20**
[2020) 2 எஸ்.சி.ஆர் 1	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 22**
(2020) 2 எஸ்.சி.சி 743	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 22**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீட்டு எண்.680/2021.

பாம்பேவில் உள்ள பாம்பே உயர்நிதிமன்றத்தின் 18.12.2017 தேதியிட்ட முன்பிணை மனு எண். 85/2017 இல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

உடன்

குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள். 681, 682 மற்றும் 683/2021.

தினேஷ் திவாரி, திருமதி. ஜெய்க்ரிதி எஸ். ஜடேஜா, அன்ஷ் கர்னாவத் ஆகியோர் மேல்முறையீட்டாளருக்கான வழக்கறிஞர்கள்.

ராகுல் சிட்னிஸ், சச்சின் பாட்டீல், ஆதித்யா ஏ பாண்டே, ஜியோ ஜோசப், ஜிதேந்திர குமார், டாக்டர் ஆர்.ஆர்.தேஷ்பாண்டே, திருமதி. பிரச்சிதி தேஷ்பாண்டே, திருமதி. பிரியங்கா தேஷ்பாண்டே, நிதில் லோங்கர், திருமதி. சோனாலி சூர்யவன்ஷி, ஷாங்கி அகர்வால் ஆகியேர் எதிர்மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்கள்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. டாக்டர் தனஞ்சய ஒய் சந்திரசூட் அவர்களால் பகரப்பட்டது.

1. இந்த நான்கு மேல்முறையீடுகளும் ஒரே மாதிரியான எழுவினாக்கள் கொண்டதால் ஒன்றாக சேர்த்து விசாரிக்கப்பட்டது. முதல் இரண்டு மேல் முறையீடுகளும் குற்றவியல் நடைமுறை சட்டம், 1973 பிரிவு 438 கீழ் இரண்டு முன்பிணை மனுக்களை 18 டிசம்பர் 2017 அன்று பாம்பேவில் உள்ள பாம்பே உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதி உத்தரவிட்டதற்கு எதிராக தொடரப்பட்டுள்ளது.

2. அந்த மனுக்களின் விவரம் வருமாறு:

(i) முன்பிணை (மனு) எண். 1971/2016 நிலேஷ் தயாந்த் சம்பள் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

(ii) முன்பிணை (மனு) எண். 85/2017 மயூர் ஜெயந்தி லால் அனாம் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

3. கு.வி.மு.ச பிரிவு 438 இன் கீழ் மேற்சொன்ன இரண்டு மனுக்களில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, அரசியலமைப்பின் 136 வது சரத்து இன் கீழ் முதல் இரண்டு சிறப்பு அனுமதி மனுக்களில் இருந்து எழும் மேல்முறையீடுகளை புகார்தாரர் கேள்வி எழுப்பினார். மீதமுள்ள இரண்டு மேல்முறையீடுகளிலும் (சிறப்பு அனுமதி மனுவின் கீழ் கொண்டுவரப்பட்டது), 18 டிசம்பர் 2017 தேதியன்று மேலே குறிப்பிட்ட இரண்டு முன்பிணை மனுகளில் உயர்நீதிமன்றத்தின் தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து, அமர்வு நீதிமன்றம் (i) திவாகர் வாமன் பட்டில் மற்றும் (ii) ஹேமந்த் அரிபா சோனாவனேக்கு முன்பிணை வழங்கப்பட்டதை எதிர்த்து, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டதை முடித்துவைத்ததற்கு எதிராக போடப்பட்டவையாகும்.

4. முதல் இரண்டு மேல்முறையீட்டு மனுக்களில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களான முதல் குற்றவாளியான மயூர் ஜெயந்திலால் ஆனம் ("ஏ 1"), நான்காவது குற்றவாளியான நிலேஷ் தயானந்த் சம்ப்ளே ("ஏ 4") ஆகியோருக்கு முன்பிணை வழங்கப்பட்டுள்ளது. இதனுடன் சேர்ந்த மற்ற இரண்டு மேல்முறையீடுகளிலும், இரண்டாவதாக குற்றம் சாட்டப்பட்ட ஹேமந்த் அரிபா சொனவன் ("ஏ 2) மற்றும் மூன்றாவதாக குற்றம்சாட்டப்பட்ட திவாகர் வாமன் பாட்டில் ("ஏ 3") ஆகியோருக்கு அமர்வு நீதிமன்றத்தால் வழங்கிய முன்பிணை சர்ச்சைக்குள்ளானது.

5. மேல்முறையீட்டாளர் ஒரு நிறுவனமாகும், அந்த நிறுவனமானது நிறுவன சட்டம், 1966 உடன் இணைக்கப்பட்டு, உள் கட்டமைப்பு திட்டங்களில் ஈடுபட்டு வருகிறது. மேல்முறையீட்டாளருக்கு சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு, அது பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:

"விஸ்வபாரதி பாட்டா - பினார் - வடப்பா சந்திப்பு புறவழிச்சாலை வேலை (கி.மீ. 0/000 முதல் 7/900, மொத்த நீளம் 7.90 கி.மீ), பிவண்டி தாலுக்கா, தானே மாவட்டம்."

இந்த மேல்முறையீடுகளில் இரண்டாம் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்ட நான்கு குற்றம் சாட்டப்பட்டவர்களும் மேல்முறையீட்டாளாரால் தொழிலாளராக ஈடுபடுத்தப்பட்டவர்கள் ஆவர். புகார்தாரரின் கூற்றுப்படி, கு.வி.மு.ச பிரிவு 161 இன் கீழ் சொல்லப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், முதல் குற்றம் சாட்டப்பட்டவர் (ஏ 1) பொது மேலாளர் என்ற தகுதியில் பணியமர்த்தப்பட்டுள்ளார். 2 வது, 3 வது மற்றும் 4 வது குற்றம்சாட்டப்பட்டவர்கள் முறையே தொடர்பு அதிகாரி, தொடர்பு அதிகாரி உதவியாளர், மற்றும் மூத்த தொடர்பு அதிகாரியாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுடைய பொறுப்பானது, அரசு அதிகாரிகள் வழங்கிய பட்டியலின் அடிப்படையில் விவசாயிகளை கண்டறிந்து, அதில் அவர்களுடைய உரிமைகோரல்களின் உண்மைத்தன்மையை சரிபார்த்த பிறகு அவர்களுக்கு இழப்பீடு விநியோகம் செய்வதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. மோசடி குற்றச்சாட்டின் கண்டுபிடிப்பை தொடர்ந்து, மேல்முறையீட்டாளர் போவாய் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அதன்பிறகு, மும்பையிலுள்ள அந்தேரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

7. 11 மே 2016 அன்று மும்பை அந்தேரி 66 வது பெருநகர குற்றவியல் நடுவர், கு.வி.மு.ச பிரிவு 156(3) இன் கீழ் முறையீட்டின் மீது விசாரணை மேற்கொள்ள காவல்துறைக்கு உத்தரவு பிறப்பித்தார். நடுவரின் உத்தரவு, குறிப்பு வசதிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

"முறையீட்டாளரின் புகாரரானது உற்று நோக்கப்பட்டது. அதாவது, தி/ள்.சுப்பிரிம் பிவண்டி வதா மனார் இன்ப்பிராஷ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அதன் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டாளர் திரு. உதய் பிரபாகர் ஜோஷி என்பவரால் பிராமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. புகார்தாரர் சார்பாக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.கே.சுக்லாவின் வாதம் கேட்கப்பட்டது. கோப்புகளில் முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் உற்று நோக்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் அவர்களுக்குள் ஒன்று சேர்ந்து, வாடா - பிவாண்டி மாநில நெடுஞ்சாலை எண் 35, மாநில நெடுஞ்சாலை மேனர் - வாடா எண் 34 மற்றும் பியூனார் வாடா சந்திப்பு ஆகிய நான்கு புறவழி சாலை அருகே சாலை கட்டுமானம் கட்டுவதற்காக முறையீட்டாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலத்திற்கான ஆவணங்களைப் பொய்யாக தயாரித்ததாக முறையீட்டாளரால் குற்றசாட்டப்பட்டுள்ளது. மேலும், 1 மற்றும் 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் கூட்டாக குற்றம்சாட்டப்பட்டவர்கள் 3 முதல் 12 வரை இணைந்து, புகார்தாரரிடம் குற்றம்சாட்டப்பட்டவர்கள் 3 முதல் 9

வரையிலானவர்களை நில உரிமையாளர்கள் என்று காண்பித்து பணத்தை செலுத்துமாறு தூண்டப்பட்டதாக புகார்தாரரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மோசடியான அறிக்கையை தயார் செய்து, போலியான ஆவணத்தை உண்மையானதாக பயன்படுத்தியதாக புகார்தாரர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றச்சாட்டின் தன்மையை கருத்தில் கொண்டு, குற்றத்தில், அது கைது செய்தற்குரிய குற்றத்தன்மை கொண்டது, இந்த விஷயத்தில் புலனாய்வு தேவை என்று தெரியவருகிறது. அதன்படி, கீழ்க்கண்ட உத்தரவை நான் பிறப்பித்தேன்.

<u>உத்தரவு</u>

1. தற்போதைய வழக்கு போவாய் காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்படுகிறது.

2. அதற்குரிய காவல் அலுவலர்களை குற்றவியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 156(3) இன் கீழ் உள்ள விஷயத்தை விசாரணை செய்யவும், அந்த அறிக்கையை விரைவில் சமர்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

3. விசாரணைக்கு அனுப்ப வேண்டும் என்ற பரிகாரம் மட்டுமே கேட்கப்பட்டுள்ளதால், அதை பல்வகை மனுவாக கருதி, அதன்படி இறுதியாக முடிக்கப்படுகிறது.

8. நடுவரின் உத்தரவை தொடர்ந்து, போவாய் காவல்நிலையத்தில் குற்ற எண். 2/2016, பிரிவுகள் 418, 419, 420, 405, 467, 468, 471, 474, 120 பி உ/இ இ.த.சவின் பிரிவு 34 கீழ், 2016 ம் மே 2024 அன்று முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டது.

9. குற்றம்சாட்டப்பட்டவர்கள், இந்த திட்டத்திற்காக விவசாயிகளிடமிருந்து கைப்பற்றிய நிலத்திற்கு உண்டான காசோலைகளை கொடுக்காமல், நிறுவனத்தை ஏமாற்றும் நோக்கத்துடன், அந்த நிதியை தவறாக பயன்படுத்தி, அதை மற்ற நபர்களின் பெயரில் கொடுத்தது, புகாரின் சாராம்சம் ஆகும். 2015 ம் வருடம் நில கையகப்படுத்தியதில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு, வாதா முதல் வடப்பே சந்திப்பு வரை சாலை கட்டமைப்பு திட்டத்தில் ஈடுப்பட்டுள்ள எதிர்மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவர்கள் உட்பட 5 ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தங்களுடைய சொந்த லாபத்திற்காக "66 பொய் மற்றும் மோசடியான வாடகைதாரர்கள்" நில கையகப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை இணைக்காமல், ரூ.87,76,755 நஷ்டம் ஏற்படுத்தியதாக, அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. முறைகேடாகப் பயன்படுத்திய தொகையின் விவரமானது புகாருடன் இணைந்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் 12 விவசாயிகளின் உதவியுடன் 7/12 சாறுகள், தாள்களின் அளவீடு மற்றும் அதிகார பத்திர ஆவணங்கள் தயார் செய்து, தோராயமாக ரூ.68 லட்சம் தொகையை விவசாயிகளுக்கு நஷ்ட ஈடாக கொடுப்பதற்கு காசோலை மூலமாக எடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனினும், அந்த தொகையை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதன்மேலும், 2014 மற்றும் 2015 வரை குற்றம்சாட்டப்பட்டவர்கள், 9 நபர்களின் பெயர்களில், கிராம பஞ்சாயத்து வடப்பே, பினார்,

கோர்சாய், நிம்பாவளி மற்றும் கவாதின் கிராம நிலம் மற்றும் வன நிலம் இருப்பதாக பொய்யாக சான்றிதழ் தயாரித்தும், அவர்களின் பெயரில் ரூ.1.57 கோடி தொகையை மோசடியாக வைப்பீடு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்களின் சொந்த லாபத்திற்காக, 10 போலியான ஆக்கிரமிப்பாளர்களின் பெயரில் ரூ. 1,84,30,400 தொகை ஆவணங்களை மோசடியாகவும், போலியாகவும் பெற்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. மேலும், அங்கு இருக்கும் நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு போலியான ஆவணங்களை தயாரித்து, ரூ.5.28 கோடியை ஏமாற்றி, கிராம வாசிகளுக்கு பெயரளவுக்கு பணம் கொடுக்கப்பட்டு காண்பித்ததாக புகாரில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

10. முதல் தகவல் அறிக்கையிலுள்ள இரண்டு குற்றம்சாட்டப்பட்டவர்கள் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை கோரி மனு தாக்கல் செய்தனர். 13 பிப்ரவரி 2017 மற்றும் 16 பிப்ரவரி 2017 தேதியிட்ட அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவில் 2 மற்றும் 3ம் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு முன்பிணை வழங்கப்பட்டது. 1 மற்றும் 4 ஆம் குற்றம்சாட்டப்பட்டவர்கள் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் முன்பிணை கோரி மனுக்கள் தாக்கல் செய்தனர்.

11. 24 ஜனவரி 2017 அன்று, 1 ஆம் குற்றம்சாட்டப்பட்டவரை கைது செய்யக்கூடாது என்று இடைக்கால பாதுகாப்பு உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. 16 பிப்ரவரி 2017 அன்று 4 ஆம் எதிரியை கைது செய்யக்கூடாது என்று இடைக்கால பாதுகாப்பு உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. 2 மற்றும் 3 ஆம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு

வழங்கப்பட்ட முன்பிணை, உயர்நீதிமன்றம் முன்பாக புகார்தாரர் எதிர்கொள்ளும் சூழ்நிலையில், விவாத பொருளாகவும் உள்ளது. இறுதியில், 18 டிசம்பர் 2017 தேதியிட்ட உத்தரவில், 1 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு உயர்நீதிமன்றம் முன்பிணை வழங்கியுள்ளது. அதன் விளைவாக, 3 மற்றும் 4 ஆம் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அமர்வு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முன்பிணை குறித்து கேள்வி எழுப்பப்பட்ட மனுகளும் முடித்து வைக்கப்பட்டது.

12. உயர்நீதிமன்றம் முன்பிணை வழங்கியதை நியாயப்படுத்தி இரண்டு பத்திகளில் சுருக்கமாக கூறிய உத்தரவு, தற்போதைய நிலையில் அதன் விவரத்தை குறிப்பிடுவது வசதியாக இருக்கும். உயர்நீதிமன்றம் கூறுவது என்னவென்றால்;

"2. புகார்தாரர் திரு. உதய் ஜோஷி என்பவர் சி.சி எண். 506/எஸ்டபள்யூ/215 என்ற புகார் எண் கொண்ட முறையீட்டை மும்பாய், அந்தேரி, 66 வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அந்த சம்பந்தப்பட்ட நீதிமன்றம் பிரிவு 156(3)ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக பதிவேடுகள் குறிக்கிறது. அந்த உத்தரவை பின்தொடர்ந்து, போவாய் காவல்நிலையம், தற்போதைய குற்ற எண்.02/2016 -ஐ பதிவு செய்தது. முன்பு குறிப்பிட்ட, கு.வி.மு.ச பிரிவு 156(3) இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை பின் தொடர்ந்து, பதிவு செய்யப்பட்ட அந்த குற்றத்திற்காக காவல்துறையினர் மனுதாரர்களை காவலில் எடுக்க கோரினர். முதல் தகவல் தந்த புகார்தாரர், 06.02.2016 தேதியிட்ட வாக்குமூலம் மற்றும் கு.வி.மு.ச பிரிவு 200 இன் கீழ் கருதப்பட்ட சட்ட

பாராதீனம் ஆகியவற்றை கொண்டுள்ளதாக பதிவேடுகள் குறிக்கிறது. அதாவது சம்பந்தபட்ட நடுவர் புகார்தாராரை சத்தியபிராமாணத்தின் பெயரில் விசாரிக்கவில்லை.

3. கு.வி.மு.ச பிரிவு 200 இன் கீழ் கருதப்பட்ட அடிப்படை சட்ட கோட்பாடு இணங்காத நிலையில், கு.வி.மு.ச பிரிவு 156(3) இன் கீழ் சம்பந்தப்பட்ட நடுவரால் பிறப்பிக்கப்பட்ட அந்த உத்தரவின் வெளியீட்டின் செல்லுபடி தன்மை சந்தேகத்தை எழுப்புவதாக உள்ளது. மேற்சொன்ன பொருண்மையை தவிர்த்து, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் சித்தாராம் சத்லிங்கப்பா மேத்ரே எதிர் மகாராஷ்டரா மாநில அரசு மற்றும் பலர் ஏஐஆர் 2011 உச்ச நீதிமன்றம் 312, பத்தி 112(வி) என்ற தீர்ப்புரையில் கூறியதாவது, இந்நீதிமன்ற பார்வையானது என்னவென்றால், மனுதாரர்கள் மீதான குற்றங்கள், அவர்களை கைது செய்து அவமானம் படுத்தும் அல்லது காயப்படுத்தும் நோக்கதிற்கானது மட்டும்தான்."

புகார்தாரர் இந்நீதிமன்றத்திலுள்ள மேல்முறையீட்டின் மேல்முறையீட்டாளர்.

13. முதலில், 28 மார்ச் 2018 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. உத்தரவுக்கு பின் மகாராஷ்டிரா மாநில அரசு மற்றும் எதிர்மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவர் ஆஜராவதற்காக அறிவிப்பு அனுப்பப்பட்டது. வழக்கறிஞர்களின் வாதுரை எங்களால் கேட்கப்பட்டது.

14. மேல்முறையீட்டாளர் சார்பாக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. தினேஷ் திவாரி மற்றும் திருமதி. ஜெய்கிர்தி எஸ்.ஜடேஜா கூறியதாவது:

(i) உயர்நீதிமன்றம் முன்பிணை வழங்கியபோது, குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக உள்ள குற்றசாட்டின் தன்மை மற்றும் தீவிரத்தை, முதல் நோக்கில் கவனிக்க தவறி விட்டது,

(ii) குற்றவியல் நடுவர் கு.வி.மு.ச பிரிவு 156 (3) இன் கீழ் புகாரை விசாரணை செய்ய கட்டளையிட்டு, இதன்படி குற்ற எண். 2/2016 ஆனாது, போவாய் காவல்நிலையத்தில் 24 மே 2016 அன்று பதிவு செய்யப்பட்டது.

(iii) உயர்நீதிமன்ற உத்தரவானது, கு.வி.மு.ச பிரிவு 200 இன் கீழ் உள்ள ஆணையின்படி, புகார்தாரரை சத்தியபிரமாணத்தின் வாயிலாக விசாரிக்க குற்றவியல் நடுவர் விசாரிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் தொடர்ந்ததாகும்.

(iv) உயர்நீதிமன்றம் இந்த பார்வையில் நோக்கும்போது, கு.வி.மு.ச பிரிவு 200 இன் கீழ் புகாரை கவனத்தில் கொள்வதற்கு முன்பு, பிரிவு 156 (3) இன் கீழ் குற்றவியல் நடுவர் விசாரணைக்கு உத்தரவிட்டது சரியானது என்றும், மேலும் பிரிவு 156 (3) மற்றும் பிரிவு 202 ன் கீழ் நடுவரால் உத்தரவிடப்பட்டு காவல்துறையால் மேற்கொள்ளப்படும் விசாரணை வேறுபாடுடையது என்று இந்நீதிமன்றத்தின் தீர்ப்புகளில் சட்ட நிலைமை தெளிவுபடுத்தியதை பார்க்க தவறிவிட்டதாகும்.

(v) எந்த நிகழ்விலும், குற்றவியல் நடுவர் அவர்கள் பிரிவு 156 (3) இன் கீழ் விசாரணைக்கு உத்தரவிட்டது சவால் செய்யப்படாத நிலையில், உயர்நீதிமன்றத்திற்கு அதன் செல்லுபடி தன்மையில் சந்தேகிப்பதற்கு எந்த சந்தர்ப்பமும் இல்லை; மற்றும்

(vi) சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்ற இடைகால உத்தரவில் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனையை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால், அதன் முடிவாக விசாரணை தடைபட்டுள்ளது.

15. மறுபுறம், குற்றம்சாட்டப்பட்டவர்களின் சார்பாக கற்றறிந்த வழக்கறிஞர் ஆர்.ஆர். தேஸ்பாண்டே ஆஜராகி சமர்பித்தது என்னவென்றால்:

(i) குற்றம்சாட்டப்பட்டவர்கள் 16 பிப்ரவரி 2017 மற்றும் 24 ஜனவரி 2017 ஆகிய தேதியிட்ட இடைகால உத்தரவின் வாயிலாக கைது செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்டு, பல சந்தர்பங்களில் அவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டார்.

(ii) குற்றம்சாட்டப்பட்டவர்கள் விசாரணைக்கு ஒத்துழைக்கும் பட்சத்தில், மூன்றரை வருடத்திற்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை பின் தொடர்ந்து வழங்கிய முன்பினையில் தலையிடுவது நியாயமாகாது.

(iii) சட்டப்பிரிவு 202 ன் உட்பிரிவு (1) இன் துணைப்பிரிவு (1) இன் விதிமுறையைப் பொறுத்தவரை, பிரிவு 202 இன் விதிகளின் விளக்கத்தில் உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட பார்வை சரியானது, அதன் கீழ் காவல்துறை விசாரணைக்கு உத்தரவிட முடியும். சிஆர்பிசியின் 200 வது பிரிவின் கீழ் புகார்தாரரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன சமர்பிப்புகள் மற்ற வழக்குகளிலும் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16. பிரிவு 438 இன் கீழான மனுக்களை உயர்நீதிமன்றம் அனுமதித்தற்கான முதன்முதல் அடிப்படை காரணம், முதல் தகவலர் தாக்கல் செய்த புகார் 06 பிப்ரவரி 2016 தேதியிட்ட பிரமாணப் பத்திரத்தால் ஆதரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கு.வி.மு.ச பிரிவு 200 இன் ஆணையின் படி, புகார்தாரர் சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிப்பதை குற்றவியல் நடுவர் நிறைவேற்றவில்லை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியது. அதன் அடிப்படையில், பிரிவு 156(3) இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று உயர்நீதிமன்றம் கருதியது.

17. தனி நீதிபதியின் உத்தரவில் கடுமையான பிழை உள்ளது. முதல் மற்றும் முக்கியமானது என்னவென்றால், பிரிவு 156(3) இன் கீழ் குற்றவியல் நடுவர் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் எந்த சவாலும் செய்யப்படாமல் இறுதி நிலையை எட்டியுள்ளது. பிரிவு 156 (3)ன் கீழ் பெருநகர குற்றவியல் நடுவர், 11 மே 2016

அன்று உத்தரவிட்டதின் நம்பகத்தன்மையை, புகார்தாரரின் முறையீட்டை பரிசீலிக்கும் போது, சந்தேகத்தை எழுப்பிய உயர்நீதிமன்றம் பிழை புரிந்துவிட்டது. இரண்டாவதாக, சட்டத்தின் நிலை குறித்து தனி நீதிபதி உத்தரவில் வெளிபடுத்தியது, இந்நீதிமன்றத்தில் கு.வி.மு.ச அத்தியாயம் 15 குறித்து தொடர்ந்து உச்சரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு உடன்படிக்கையாக இல்லை. அத்தியாயம் 15 ன் ஒரு பகுதியான பிரிவுகள் 200 மற்றும் 202 கீழே பிரித்து சொல்லப்பட்டுள்ளது.

" **பிரிவு 200. புகார்தாரரை விசாரித்தல்.** - புகாரின் பேரில் குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுகிற ஒரு நடுவர், புகார்தாரர் சாட்சிகள் எவரேனும் இருந்தால், அவர்களையும் சத்தியப்பிரமாணத்தின் பேரில் விசாரித்தல் வேண்டும்; அத்தகைய விசாரணையின் சாராம்சம், எழுத்திலமைக்கப்பட்டு புகார்தாரராலும் சாட்சிகளாலும் அதோடு நடுவராலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும். வரம்புரையாக புகார் எழுத்து வடிவில் அளிக்கப்படும்போது, குற்றவியல் நடுவர், புகார்தாரரையும் சாட்சியாளரையும் விசாரிக்க வேண்டியதில்லை.

(அ) ஒரு பொது ஊழியர் தம் அலுவல் முறைக் கடமைகளை ஆற்றிவரும் போது, அல்லது, அவ்வாறு ஆற்றி வருவதாகப் புலப்படும் போது, அவராலோ, அல்லது ஒரு நீதிமன்றத்தாலோ புகார் அளித்திருந்தால்;

(ஆ) குற்றவியல் நடுவர், ஒரு வழக்கை பரிசீலனைக்காகவோ விசாரணைக்காகவோ 192 ஆவது பிரிவின்படி, வேறொரு நடுவருக்கு அந்த வழக்கை

மாற்றி வைப்பாரானால், மேலும், வரம்புரையாக புகார்தாரரையும் சாட்சிகளையும் விசாரித்த பிறகு 192 ஆம் பிரிவின் கீழ் குற்றவியல் நடுவர் மற்றொரு குற்றவியல் நடுவரிடம் வழக்கை ஒப்படைத்தால், பிந்தைய குற்றவியல் நடுவர் அவர்களை மறு விசாரணை செய்ய வேண்டியதில்லை.

பிரிவு 202. நீதிமுறைக் கட்டளை பிறப்பிப்பதைத் தள்ளிப் போடுதல். - (1) நடுவர் எவரும், எந்தக் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தாம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ, அந்தக் குற்றத்தைப் பற்றி முறையீடொன்று, அல்லது 192 ஆவது பிரிவின் படி தமக்கு மாற்றி வைக்கப்பட்டுள்ளதோ, அந்தக் குற்றம் பற்றிய முறையீடு ஒன்று வரப்பெற்றதன் பேரில், தாம் பொருத்தமென நினைத்தால், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நீதிமுறைக் கட்டளை பிறப்பிப்பதைத் தள்ளிப்போட்டு, நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான ஆதாரம் இருக்கிறதா, இல்லையா, என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு, தாமே அந்த வழக்கை பரிசீலனை செய்யலாம் அல்லது, காவல் அலுவலராலோ, தாம் பொருத்தமென நினைக்கும் வேறெவராலுமோ, புலனாய்வு செய்யப்படுவதற்கு உத்தரவிடலாம்.

இருப்பினும், விசாரணைக்கு அத்தகைய வழிகாட்டுதல் எதுவும் செய்யப்படக்கூடாது,-

(அ) புகார் செய்யப்பட்டுள்ள குற்றமானது, அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத் தக்கதென்று நடுவருக்குத் தோன்றுமிடத்து; அல்லது,

(ஆ) அந்த புகார், ஒரு நீதிமன்றத்தால் செய்யப்படவில்லை என்றால், புகார்தாரர் சாட்சிகள் (எவரேனும்) முன்னிலையாகியிருந்தால், அவர்களையும் 200 ஆவது

பிரிவின்படி மெய்யுறுதியின் பேரில் விசாரணை செய்திருந்தாலன்றி, மேற்சொன்னவாறு புலனாய்வு செய்வதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) (1) ஆவது உட்பிரிவின்படியான ஒரு பரிசீலணையில், நடுவர் தாம் பொருத்தமென நினைத்தால், சாட்சிகளின் சாட்சியத்தை மெய்யுறுதியின் பேரில் எடுத்துக் கொள்ளலாம். இருப்பினும், புகார் செய்து அளிக்கப்பட்ட குற்றமானது, அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கதென்று, அந்த நடுவருக்குத் தோன்றுமானால், அவர் முறையிடுபவரை அல்லது சாட்சிகள் அனைவரையும் கொண்டு வருமாறு கோருவதுடன், அவர்களை மெய்யுறுதியின் பேரில் விசாரணை செய்தலும் வேண்டும்.

(3) 1 ஆவது உட்பிரிவின்படியான ஒரு புலனாய்வு, காவல் அலுவலரல்லாத வேறு ஒருவரால் செய்யப்படும் விசாரணையின் போது, அந்த விசாரணைக்கு, பிடிகட்டளையின்றிக் கைது செய்யும் அதிகாரத்தைத் தவிர, காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் அவர் அந்தப் புலனாய்வுக்காகக் கொண்டிருப்பார்.

18. இந்த ஏற்பாடுகள் சுரேஷ் சந்த் ஜெயின் எதிர் மத்திய பிரதேசம் அரசு என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் இரண்டு கற்றறிந்த நீதிபதிகளால் விளக்கப்பட்டுள்ளது. பிரிவு 156(3) இன் ஏற்பாடுகளை குறிப்பிட்ட பிறகு, மாண்புமிகு நீதியரசர் கே.டி.தாமஸ் இரண்டு நீதிபதிகளின் அமர்வு சார்பாக விவரித்தது, என்னவென்றால்:

"8. குறிப்பிடப்பட்ட அந்த புலனாய்வு ஒரே மாதிரியான புலனாய்வு தான், XII ம் அத்தியாயத்தின் சட்டத்தில் பல்வேறு படிகள் விரிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த விசாரணையானது, காவல்நிலையத்தின் பொறுப்பு அதிகாரியால் கைது செய்தற்குரிய குற்றத்தின் தகவல், விவரம் புத்தகத்தில் பதிவு செய்த பிறகு, புலனாய்வை தொடங்கவேண்டும். அதன்பிறகு தொடங்கப்பட்ட புலனாய்வு பிரிவு 173 சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, காவல்துறை தாக்கல் செய்த அறிக்கையுடன் மட்டுமே முடிவு பெறும். குற்றவியல் நடுவரின் உத்தரவு எதுவும் இல்லாமலேயே அத்தியாயத்தில் குறிப்பிட்ட புலனாய்வு காவல்துறையால் தொடங்கப்படும். ஆனால் குற்றவியல் நடுவர் பிரிவு 156(3) இன் கீழ் உத்தரவிட்ட புலனாய்வு, வேறு வகையான புலனாய்வு என்று எடுத்துக்கொள்ள முடியாது. அத்தகைய விசாரணையானது, பிரிவு 173 சட்டத்தில் குறிப்பிட்டப்பட்ட அறிக்கை மூலம் மட்டுமே முடிவு பெறும். இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான குறிப்பு என்னவென்றால், நடுவர் அத்தியாயம் XII இன் கீழ் புலனாய்விற்கு உத்தரவிடுவது, அந்த குற்றத்தை விசாரணைக்கு எடுத்து கொள்வதற்கு முந்தையதாகும்.

அத்தியாயம் XV இன் ஏற்பாட்டில் குறிப்பிட்டு கையாளும்போது, குற்றவியல் நடுவர் ஒரு குற்றத்தை விசாரணைக்கு எடுக்கும்போது அத்தியாயம் XV உச்சரிக்கப்பட்ட நடைமுறையை பின்பற்றவேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் கவனிக்கப்பட்டது. பிரிவு 202 (1) இன் கீழ் நடுவரால் காவல்துறை அதிகாரியோ அல்லது வேறு நபர்களால் விசாரிப்பதற்கு உத்தரவிடுவதற்கு காரணம், நடுவர் மேலும் தொடரலாமா அல்லது

வேண்டாமா என்பதை மட்டும் வரையறுத்து செயல்படுத்துவதின் நோக்கமாகும். இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவென்றால்,

9. "ஆனால் நடுவர் குற்றம் ஒன்றை விசாரணைக்கு முன்மொழிய நினைத்தால், புலனாய்வுக்கு உத்தரவிடத்தேவையில்லை. குற்றம் ஒன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்பட்சத்தில், அத்தியாயம் XV ஆவது சட்டத்தில் கூறப்பட்ட நடைமுறையை பின்பற்ற வேண்டும். பிரிவு 202(1) சட்டத்தொகுப்பை படிக்கும்போது, அதில் புலனாய்வு என்பது வரையறுக்கப்பட்ட வகை என்று தோன்றுகிறது. அந்த புலனாய்வை நடுவர் அவர்கள் காவல்துறை அல்லது வேறு நபர்களால் மேற்கொள்ளலாம் என்று உத்தரவிடலாம். அந்த புலனாய்வு நடுவர் தொடர்ந்து செயல்பட போதுமான காரணம் உள்ளதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு உதவியாக மட்டும் இருக்கும். இது பிரிவு 202(1) குறிப்பிடப்பட்ட வார்த்தைகளிலிருந்து அறிய முடிகிறது, அதாவது,

"அல்லது புலனாய்வை காவல்துறை அல்லது அவர் தகுதி வாய்ந்த வேறு மற்ற நபர்களால் மேற்கொண்டு, வழக்கு தொடர்வதற்கு போதுமான காரணம்" உள்ளதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்க உத்தரவிட வேண்டும்.

ஏனென்றால், அவர் ஏற்கனவே தன்னிடம் உள்ள அதிகார வரம்பிற்குள் புகாரில் குறிப்பிட்ட குற்றம் குறித்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுவிட்டார்.

சுருக்கமாக அந்த சட்ட நிலை என்னவென்றால் :

10. இந்த நிலையானது தெளிவாக உள்ளது. எந்தவொரு குற்றவியல் நடுவரும் குற்றமொன்றை எடுத்துக்கொள்வதற்கு முன்பு சட்டத்தின் பிரிவு 156(3) இன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடலாம். அவ்வாறு செய்யும்போது, அவர் குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாததால், மெய்யுறுதியின் பேரில் புகார்தாரரை விசாரிக்க தேவையில்லை. காவல்துறை விசாரணை தொடங்க செயல்படுத்த நோக்கும்போது, நடுவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட்டுக்கொள்ளலாம். அதில் எந்த சட்டவிரோதமும் கிடையாது. மொத்தத்தில் எப்படி இருந்தாலும், சட்டத்தின் பிரிவு 154 இன் கீழ் காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவரால் கைது செய்தற்குரிய குற்ற நிகழ்வு தொடர்பாக கிடைத்த தகவலின் சாராம்சத்தை பதிவு செய்வதுதான் முதல் தகவல் அறிக்கை உள்ளடக்கியதாகும். இருப்பினும், சட்டத்தின் பிரிவு 156(3) இன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடும்போது நடுவரால் பல்வேறு வார்த்தைகளில் குறிப்பிடவில்லை என்றாலும், புகாரில் வெளிபடுத்தப்பட்ட கைது செய்தற்குரிய குற்றம் குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரியின் கடமை, ஏனென்றால் காவல் அதிகாரி அத்தியாயம் XII இல் கருதப்பட்ட அடுத்த நடவடிக்கைகளை அப்போதுதான் எடுக்கமுடியும்.

19. மேற்சொன்ன முடிவுகள் இந்த நீதிமன்றத்தில் பல்வேறு தீர்ப்புகளில் பிரதானமாக உச்சரிக்கப்பட்டுள்ளது. திலவார் சிங் எதிர் டெல்லி அரசு, மற்றும் சுரேஷ் சந்த் ஜெயின் (மேலே) ஒப்புதலுடன் மேற்கோள் காட்டப்பட்டது. திலக் நகர்

இன்டஸ்டிரிஸ் லிமிடெட் எதிர் ஆந்திர மாநில அரசு என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் அமர்வில் கூறியதாவது:

"12. புகார்தாரர் கைது செய்தற்குரிய குற்றமொன்றை வெளிபடுத்தி இருப்பினும், பிரிவு 156(3) இன் கீழான அதிகாரத்தை நடுவர் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பு செயல்படுத்தலாம்.

20. அஞ்சு சௌத்திரி எதிர் உத்திரபிரதேச அரசு, மாண்புமிகு நீதியரசர் திரு.ஸ்வதந்தர் குமார் அமர்வு குறிப்பிட்டது என்னவென்றால், பிரிவு 156 முதன்மையாக கைது செய்தற்குரிய வழக்குகளை விசாரிக்கும் காவல் அதிகாரியின் அதிகாரத்தைப் பற்றி கையாள்கிறது. பிரிவு 156(3) இன் கீழ் நடுவர் உத்தரவிடும் போது, அவர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. நடுவரின் உத்தரவானது, அவர்களுடைய முதன்மை பணி மற்றும் விசாரணையின் அதிகாரத்தை செயல்படுத்துவதற்கான "பரவலான நினைவூட்டல் அல்லது காவல்துறைக்கு தகவல்" என்ற தன்மையில் உள்ளது. நீதிமன்ற தீர்ப்பில் நடுவருக்கு உள்ள பிரிவு 156(3) கீழான அதிகாரம், பிரிவு 202 ஏற்பாடுகளால் பாதிக்கப்படவில்லை என்றும், மற்றும் அதில் கண்டறிந்து என்னவென்றால் :-

40. "மற்றொரு சூழ்நிலையில், நடுவர் புகார் மனுக்களாக எடுத்துக்கொண்டு பிரிவு 156(3) ன் கீழ் உத்தரவிட தகுதியுடையவர் என்ற நிலை வரலாம். ஆனால், அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிறகு, சட்டத்தின் அத்தியாயம் XV கீழ் உள்ள பிரிவு

200 இன் வகைமுறைகளுக்கு ஏற்ப வழக்கமான புகாராக அதை கருத வேண்டும். அங்கேயும் நடுவர், காவல் அலுவலர் அல்லது மற்ற நபர்களுக்கு தாம் மேற்கொண்டு தொடர போதுமான காரணம் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதை முடிவு செய்யும் நோக்கத்திற்காக, புலனாய்வு செய்ய கட்டளையிடுவதற்கு அதிகாரம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த வரையறைபடுத்தப்பட்ட அதிகாரம், பிரிவு 156(3) சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரத்தை காட்டிலும் பரந்த ஒன்று கிடையாது. சட்டத்தின் பிரிவு 156(3) இன் கீழ் நடுவரால் புலானாய்வு செய்ய காவல்துறைக்கு உத்தரவிடும் அதிகாரமானது, பிரிவு 202 ல் தொட்டு அல்லது பாதிப்பு ஏற்படுத்தவில்லை, ஏனென்றால் அந்த அதிகாரம் விசாரணைக்கு எடுப்பதற்கு முன்பு செயல்படுத்துவது ஆகும். மற்றவற்றில், பிரிவு 202 இன் கீழ் நடுவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, புகாரை தாமாகவோ அல்லது மற்ற நிறுவனத்திடம் விசாரணை செய்ய தேர்ந்தெடுக்கும் வழக்குகளுக்கு மட்டும் தான் பொருந்தும். ஆனால் சில சூழ்நிலைகளில், நடுவர் தானே விசாரணைக்கு எடுப்பதற்கு முன்பு, சட்டத்தின் பிரிவு 156(3)ன் கீழ் ஒரு தூய்மையான மற்றும் எளிமையான புலனாய்வு செய்ய உத்தரவிடலாம். இந்த வழக்குகள் வெவ்வேறு சூழ்நிலைகளில் கீழ் வரும். இந்த பார்வையை இந்நீதிமன்றத்தின் அமர்வு, ரமேஷ் பாய் பாண்டு ராவ் ஹெடாவ் எதிர் குஜராத் அரசு [(2010) 4 எஸ்.சி.சி 185 : (2010) 2 எஸ்.சி.சி (குற்றவியல் 801) என்பதில் எடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக, இந்த இரண்டு அதிகாரங்களுக்கு இடையில் உள்ள வேறுபாட்டினை, இந்நீதிமன்றத்தின் தீர்ப்பான ஸ்ரீனிவாஸ் குண்டலுரி எதிர் செப்கோ எலக்டிரிக் பவர் கன்ஸ்டரக்க்ஷன் கார்பரேசன் [(2010) 8 எஸ்.சி.சி 206 : (2010) 3 எஸ்.சி.சி (சிஆர்ஜ) 652] என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. அதில் நீதிமன்றம் கூறியதாவது : (எஸ்.சி.சி பக்கம் .218, பத்தி 23)

"23. சட்டத்தின் பிரிவு 156(3) இன் கீழ் தொடர்வதற்கு, முன்பு தேவையானது என்னவென்றால், புகாரை வாசிக்கும்போது, அது கைது செய்தற்குரிய குற்றத்தை வெளிப்படுத்துகிறதா என்பதும், அவ்வாறு வெளிப்படுத்தினால் நடுவர் புகாரை தொடர்வதற்கு போதுமான காரணம் உள்ளதா என்பதில் மனதை செலுத்தாமல், புலனாய்வு செய்ய காவல்துறைக்கு கட்டளையிடலாம்."

ஆனால், மேலும் தொடர்வதற்கான போதுமான காரணம் உள்ளது என்று முடிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டால், அது சட்டத்தின் அத்தியாயம் XV இன் கீழ் அந்த வழக்கு வரும்.

21. உயர்நீதிமன்றம் மேற்சொன்ன தீர்ப்புகளின் படி மதிப்பிடவில்லை என்று வெளிப்படையாக தெரிய வருகிறது. அவ்வாறு இல்லாமல் இருந்தால், இந்நீதிமன்றத்தின் முன்மாதிரி நடப்புகளுக்கு முரணாக ஒரு கொள்கைளை உருவாக்கி தொடர்ந்து இருக்காது.

22. உயர்நீதிமன்றம் முதல் இரண்டு மேல்முறையீடுகளில், பிரிவு 438 இன் கீழ் வழங்கிய முன்பிணை மற்றும் அதை தொடர்ந்து அமர்வு நீதிமன்ற உத்தரவை சவால் செய்து, இதன் உடனான மேல்முறையீடுகளில் உத்தரவிட்டது, வெளிப்படையாக குற்றத்தின் தன்மை மற்றும் கவனத்தை காண தவறிவிட்டது என்று சாட்சியமாகிறது. இந்நீதிமன்றம், சுசிலா அகர்வால் எதிர் டெல்லி அரசு என்ற வழக்கின் தீர்ப்பில்,

முன்பிணை வழங்குவதற்கு நோக்கவேண்டிய தேவையானவற்றை பற்றி கீழ்கண்டவாறு விளக்கியுள்ளது :

"92.3...ஒரு மனுவை ஆராய்கின்ற போது (முன்பிணை வழங்குவதற்கு) நீதிமன்றம் குற்றத்தின் தன்மை, அதில் அந்த நபரின் செயல்பாடு, புலனாய்வு அல்லது சாட்சிகளை களைப்பதற்கு (சாட்சிகளை பயமுறுத்துவதும் சேர்த்து), செல்வாக்கு செலுத்த வாய்ப்புள்ளதா, நீதி கிடைப்பதலிருந்து தப்பிக்க வாய்ப்புள்ளதா (நாட்டைவிட்டே சென்றுவிடுவது) என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்,

92.4. நீதிமன்றம் குற்றத்தின் தன்மை மற்றும் ஈர்ப்பு, விண்ணபதாரர் வகித்த பங்கு மற்றும் வழக்கின் பொருண்மை ஆகியவற்றை முன்பிணை வழங்குவதற்கோ, மறுப்பதற்கோ பரிசீலனை செய்ய வேண்டும் என்று பொதுவாக வழிகாட்டப்பட்டுள்ளது. முன்பிணை கொடுப்பது அல்லது மறுப்பது நீதிமன்றத்தின் விருப்புரிமை, அப்படியானால் என்ன மாதிரியான சிறப்பு நிபந்தனை வழங்கலாம் என்பது வழக்கின் பொருண்மை மற்றும் நீதிமன்றத்தின் விருப்புரிமை சம்பந்தப்பட்டதாகும்."

மேல்முறையீடு நீதிமன்றம் அல்லது மேல்நிலை நீதிமன்றம், தொடர்புடைய காரணிகள் இல்லாமல் பிணை வழங்கினால், அந்த பிணையை நீதிமன்றம் நீக்கறவு செய்யலாம். மயக்கலா தருமராஜம் எதிர் தெலுங்கானா அரசு என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கூறியதாவது :

"9. பிணை வழங்கிய உத்தரவானது தீவிரமான குளறுபடியால், நீதி தவறு இருக்கும் வழக்கில், அந்த பிணையை ரத்து செய்வது நியாயமான ஒன்றாகும். நீதிமன்றம் பிணை வழங்கும்போது தொடக்கத்திலேயே குற்றம்சாட்டப்பட்டவரின் ஈடுபாட்டை குறிக்கும் தொடர்புடைய பொருள் அல்லது பிணை வழங்குவதற்கு சம்பந்தமில்லாத தேவையற்ற பொருளை கணக்கு எடுத்திருந்தால், உயர்நீதிமன்றம் அல்லது அமர்வு நீதிமன்றம், அந்த பிணையை ரத்து செய்வது நியாயமான ஒன்றாகும்.

23. எதிர்மனுதாரர் - குற்றம் சாட்டப்பட்டவர் மீது சாலை விரிவாக்கத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிறுவனம் பணம் செலுத்தவும், முறையீட்டாளரால் ஒப்புக்கொண்ட தொகையை மோசடியாக தவறாக பயன்படுத்தியதாக தீவிரமான குற்றச்சாட்டு உள்ளது. முன்பு விளக்கியதுபோல், முதல் தகவல் அறிக்கையில் மோசடியாகவும், தவறாகவும் நிதியை பயன்படுத்தியது குறித்த குற்ற செயல் குறித்து விவரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றத்தின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, முன்பிணை வழங்குவதற்கு எந்த வழக்கும் வெளிப்படுத்தவில்லை. உயர்நீதிமன்றம், சட்டம் மற்றும் பொருண்மையின் மதிப்பீடு இரண்டையும் கவனத்தில் கொள்ளாமல் தவறு இழைத்துவிட்டது.

24. நாங்கள் இதன்படி, இந்த இரண்டு மேல்முறையீடுகளை அனுமதித்தும் மற்றும் உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நீக்கறவு செய்ய உத்தரவிடப்படுகிறது. இதன்படி சட்டத்தின் பிரிவு 438 இன் கீழ் எதிர்மனுதாரர் - குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கிய

முன்பிணையின் உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. மேற்சொன்ன விதிமுறைகளின்படி மேல்முறையீடுகள் முடித்துவைக்கப்படுகிறது.

25. நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் ஏதாவது இருந்தால் அதுவும் முடித்துவைக்கப்படுகிறது.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."